**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருக்கழுக்குன்றம்.**

முன்னிலை :– **திரு.S.வினீத், B.A.,B.L.,(Hon's)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் புதன்கிழமை
பராபவ வருடம் சித்திரை மாதம் 09 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 232/2014**
**CNR No.TNCG120005362014**

அரசு தரப்பில்
காவல் உதவி ஆய்வாளர்,
மாமல்லபுரம் காவல் நிலையம்,
குற்ற எண் 413/2013.

.. குற்றமுறையிடுபவர்.

எதிர்

1) சண்முகம், வயது 45/2013, த/பெ.ராமசாமி
2) சுப்பிரமணி, வயது 45/213, த/பெ.ராமசாமி

.. எதிரிகள்.

**Case Summary**

| Sl.No. | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | A1, A2 - 19.09.2013 to 01.10.2013 |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | 22.08.2014 |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |

<table>
<tr><td>4</td><td>The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be</td><td>30.06.2017</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions Under Section 317 of the Code.</td><td>CMP No.418/2026 - Petition filed u/s. 311 of Cr.P.C. - allowed.</td></tr>
<tr><td>6</td><td>Date of examination in-chief and cross- examination of a witness:</td><td><table><tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW1</td><td>20.06.2019</td><td>20.06.2019</td></tr><tr><td>PW2</td><td>20.06.2019</td><td>20.06.2019</td></tr><tr><td>PW3</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr></table></td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under Section 313 of the Code:</td><td>07.04.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending/recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof.</td><td>NIL</td></tr>
</table>

இவ்வழக்கு 23.08.2014 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள்

திரு.B.நாராயணன், திரு.D.குமரேசன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1.** எதிரிகள் மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், கடந்த 18.09.2013 ம் தேதி மாமல்லபுரம் கோட்டீஸ்வரன் லாட்ஜ் என்ற இடத்தில் புகார்தாரர் முனியன் என்பவர் மாலை 4.00 மணியளவில் கடற்கரைக்கு சென்றுவிட்டு பஸ் ஸ்டேண்டுக்கு போவதற்காக வந்துக் கொண்டிருந்த போது மேற்படி லாட்ஜின் முன்பு 2 வது எதிரி சுப்பிரமணி லாட்ஜில் அழகிகள் உள்ளார்கள் என்றும், லாட்ஜ்சை குத்தகைக்கு எடுத்து நடத்தும் 1 வது எதிரி சண்முகத்தின் அனுமதியுடன் தான் விபச்சார தொழில் செய்து வருவதாகவும் கூறி மேற்படி புகார்தாரரை 1 வது எதிரியிடம் அழைத்துச் சென்றதாகவும், 1 வது எதிரி 2 வது எதிரியிடம் 8 ம் நெம்பர் ரூமிற்கு புகார்தாரர் முனியனை அழைத்துச் செல் என்று கூறி, அங்கிருந்த காமாட்சி என்ற பெண்ணுடன் உல்லாசமாக இருக்க பணம் ரூ.1,500/- கொடு என்று கேட்ட குற்றத்திற்காக எதிரிகள் சட்டப்பிரிவுகள் 3, 4 and 5 ITP Act-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிகளுக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால அவகாசம் வழங்கியும், எதிரிகளிடம் குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றங்கள் குறித்து விளக்கிக்கூறி வினவியபோதும், ஆவணங்களை பரிசீலனை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 3, 4 and 5 ITP Act–ன் கீழும், 2வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4 and 5 ITP Act–ன்–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக்கூறி வினவியபோதும் குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எதிரிகளின் குற்ற மறுப்பினையடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரித்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையும், அ.சா.பொ.1ம் குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–

**5.1.** புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2013ம் ஆண்டு ஒரு நாள் மகாபலிபுரம் சென்று சுற்றி பார்த்துவிட்டு வீட்டிற்கு கிளம்பும் போது தனது மணி பர்ஸ் காணவில்லை என்றும், அது குறித்து புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றிருந்தபோது தன்னிடம் போலிசார் கையொப்பம் கேட்டதால் தான் கையொப்பம் போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் கூறியதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2.** அ.சா.2 தலைமை காவலர் தனது சாட்சியத்தில், கடந்த 18.09.2013 ம் தேதி மாமல்லபுரம் காவல் ஆய்வாளருடன் தானும், தலைமை காவலர் ரமேஷ் ஆகியோர் மாமல்லபுரம் கோடிஸ்வர லாட்ஜ் சென்று சோதனை செய்தபோது 2 வது எதிரி சுப்பிரமணி தங்களிடம் எந்தவிதமான அச்சுறுத்தலுமின்றி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் தன் முன்னிலையிலும், தலைமை காவலர் ரமேஷ் முன்னிலையிலும் பதிவு செய்து அதனடிப்படையில் காவல் ஆய்வாளர் மேற்படி எதிரி அடையாளம் காட்டிய ரூம்மிற்கு சென்று ஆணுறை மூன்றை தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**5.3.** அ.சா.3 காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 18.09.2013 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது முனியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 413/2013 சட்டப்பிரிவுகள் 3, 4, 5 ITP Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்து புகார்தாரர் முனியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகள் சண்முகம், சுப்பிரமணி ஆகியோர்களை 18.09.2013 ம் தேதி மாமல்லபுரம் கோட்டீஸ்வரா லாட்ஜில் கைது செய்து எதிரி சுப்பிரமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர்கள் 1533 ரமேஷ் மற்றும் 670 செந்தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து வழக்கு சொத்தான ஆணுறைகள் 3 எண்ணிக்கைகளை கைப்பற்றி மேற்படி போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார்

செய்து, எதிரிகளை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தி, கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து மேற்படி போலிஸ் சாட்சிகளான தலைமை காவலர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரி சுப்பிரமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பாதிக்கப்பட்ட பெண்கள் காமாட்சி மற்றும் கலைவாணி ஆகியோர்களை மீட்டு அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அரசு பெண்கள் கூர்நோக்கு இல்லம் மைலாப்பூரில் ஒப்படைத்தார் என்றும், பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 3, 4, 5 ITP Act–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான ஆணுறைகள் 3 எண்ணிக்கள் அ.சா.பொ.1 வரிசையாகவும் ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1), (ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சி கூறுவது பொய் சாட்சி என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள். எதிரிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது.

**7.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது அ.சா.2 மற்றும் அ.சா.3 ன் சாட்சியங்களும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6

வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 வரிசை வாயிலாக 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, 1வது எதிரியை சட்டப்பிரிவுகள் 3, 4 and 5 ITP Act–ன் கீழும், 2வது எதிரியை சட்டப்பிரிவுகள் 4 and 5 ITP Act–ன் கீழும் குற்றவாளிகள் என்று தீர்மானித்து அதிக பட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**8.** கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அ.சா.1 அவரது மணி பர்ஸ் காணவில்லை என்பதால் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது போலிசார் கையெழுத்து வாங்கியதாக கூறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளார் என்றும், வேறு தனி நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றும், இவ்வழக்கானது புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றும், ஆகவே சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**9.** இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், 1வது எதிரி மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 3, 4 and 5 ITP Act–ன் கீழும், 2வது எதிரி மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 4 and 5 ITP Act–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**9.1.** அரசு தரப்பில் இவ்வழக்கு சம்பவமாக கடந்த 18.09.2013ம் தேதி புகார்தாரர் அ.சா.1 முனியன் என்பவர் மாலை 4.00 மணியளவில் மாமல்லபுரம் கோட்டீஸ்வரன் லாட்ஜ் முன்பு வந்துக் கொண்டிருந்த போது 2வது எதிரி சுப்பிரமணி லாட்ஜில் அழகிகள் உள்ளார்கள் என்றும்,

லாட்ஜ்சை குத்தகைக்கு எடுத்து நடத்தும் 1வது எதிரி சண்முகத்தின் அனுமதியுடன்தான் விபச்சார தொழில் செய்து வருவதாக கூறி அ.சா.1 ஐ 1வது எதிரியிடம் அழைத்துச் சென்றபோது 1வது எதிரி 2வது எதிரியிடம் 8ம் நெம்பர் ரூமிற்கு அ.சா.1 ஐ அழைத்துச் செல் என்று கூறியும், அங்கிருந்த காமாட்சி என்ற பெண்ணுடன் உல்லாசமாக இருக்க பணம் ரூ.1,500/- கொடு என்று கேட்டதாக எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

**9.2.** இவ்வழக்கில் நிகழ்வு புகார்தாரர் முனியன் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது புகாரில் கடந்த 18.09.2013ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் கடற்கரைக்கு சென்றுவிட்டு மாமல்லபுரம் பஸ்டாண்ட்டிற்கு செல்வதற்காக கோட்டீஸ்வரன் லாட்ஜ் முன்பு வரும் போது லாட்ஜ் முன்பு நின்றிருந்த ஒரு நபர் தன்னை கூப்பிட்டு தன் பெயர் சுப்பிரமணி என்றும், தான் வேலை செய்யும் கோட்டீஸ்வரா லாட்ஜில் அழகிகள் உள்ளார்கள் என்றும், மேற்படி லாட்ஜை குத்தகைக்கு எடுத்து நடத்தும் சண்முகத்தின் அனுமதியுடன் அழகிகளை சப்ளை செய்து விபச்சாரம் தொழில் செய்து வருவதாகவும், பணம் கொடுத்தால் அழகிகளுடன் உல்லாசமாக இருக்கலாம் என அவர் சொல்லி தன்னை அவருடன் மேற்படி லாட்ஜை குத்தகைக்கு எடுத்து நடத்தும் சண்முகத்திடம் கூட்டி சென்றதாகவும், சண்முகம் லாட்ஜில் வேலை செய்யும் முனுசாமி என்பவரை அழைத்து தன்னை 8ம் நெம்பர் ரூமிற்கு போ என்று சொன்னதாகவும், பின்னர் அழகி ஒருவரை அழைத்து வந்து இவர் பெயர் காமாட்சி என்றும், அவருடன் உல்லாசமாக இருக்க பணம் ரூ.1500/- கொடுக்க சொன்னதாகவும், தன்னிடம் பணம் ரூ.500/- மட்டுமே

இருந்ததாலும், தனக்கு அருவருப்பாக இருந்ததாலும் தான் உடனே அங்கிருந்து வெளியே வந்துவிட்டதாக புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரை பெற்று காவல் ஆய்வாளர் சாரதி மேற்படி லாட்ஜை தணிக்கைக்கு செல்லும் விவரத்தை இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலம் அனுப்பிவிட்டு தணிக்கைக்கு சென்று எதிரிகள் சண்முகம், சுப்பிரமணி ஆகியோர்களை கைது செய்து லாட்ஜில் இருந்த காமாட்சி மற்றும் கலைவாணி ஆகிய பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 413/2013 சட்டப்பிரிவுகள் 3, 4 and 5 ITP Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**9.3.** இவ்வழக்கில் ஆவணங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 காவல் ஆய்வாளர் சாரதி, மேற்படி புகாரை கடந்த 18.09.2013 ம் தேதி 16.30 மணிக்கு பெற்று தணிக்கைக்கு செல்லும் விவரத்தை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி சம்பவ இடமான மேற்படி கோட்டீஸ்வரா லாட்ஜிற்கு சென்று அங்கே இருந்த 1, 2 எதிரிகளை 17.00 மணிக்கு கைது செய்து எதிரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களை 17.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்ததாக கைது அட்டை காட்டுகிறது. ஆனால் மேற்படி எதிரிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மறுநாள் 19.09.2013 பிற்பகல் 3.30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஒரு நாள் காலதாமதம் எதனால் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பால் தெளிவுபடுத்தப்படவில்லை. மேற்படி காலதாமதம் அரசு வழக்கின் நம்பக தன்மையை முற்றிலும்

பாதிக்கிறது.

**9.4.** இவ்வழக்கில் நிகழ்வு புகார்தாரர் முனியன் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில், மாமல்லபுரம் சென்று சுற்றி பார்த்துவிட்டு வீட்டிற்கு கிளம்பும் போது அ.சா.1ன் மணிபர்ஸ் காணவில்லை என்பதால் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றிருந்தபோது தன்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கியதாகவும், அந்த கையொப்பம் தான் தற்போது தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்று அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் இவ்வழக்கின் அடிப்படை ஆதாரமான அ.சா.ஆ.1 புகாருக்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எனவே மேற்படி முரண்பாடு அரசு தரப்பு வழக்கின் நம்பக தன்மையை முற்றிலும் பாதிப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.5.** இவ்வழக்கில், தலைமை காவலர் செந்தமிழ்செல்வன் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் சாரதியுடன் மாமல்லபுரம் கோட்டீஸ்வரா லாட்ஜ் சென்று சோதனை செய்தபோது 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், 2வது எதிரி ஆஜர் செய்த 3 ஆணுறைகளை சாட்சி தலைமை காவலர் ரமேஷ் மற்றும் தன் முன்னிலையில் கைப்பற்றியதாக சாட்சியம் அளித்து அளித்துள்ளார். மேற்கூறிய சாட்சியத்தை ஆழ்ந்து பரிசீலிக்கையில், அ.சா.2 சம்பவ இடத்தில் 2வது எதிரியை கைது செய்ததாக மட்டும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் மற்ற எதிரி மற்றும் அங்கிருந்து மீட்கப்பட்டதாக சொல்லப்படும் பாதிக்கப்பட்ட பெண்கள் குறித்து எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை.

எனவே, மேற்படி அ.சா.2 ன் சாட்சியம் தெளிவற்ற சாட்சியமாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.2 அலுவல் சாட்சி ஆவார். மற்றும் மேற்படி தணிக்கை மாலை 5.00 மணிக்கு பொது மக்கள் அதிகம் வந்து போகும் இடமான மாமல்லபுரம் கோட்டீஸ்வரா லாட்ஜில் நடந்தப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில் மேற்படி 2 வது எதிரி கொடுக்கதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் எந்த ஒரு தனிப்பட்ட அக்கறையற்ற சாட்சிகளையும் முன்னிறுத்தாதது அரசு தரப்பு வழக்கின் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**9.6.** இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் சாரதி புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று 1, 2 எதிரிகளை கைது செய்து 2 வது எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்தினை தன்னுடன் அழைத்துச் சென்ற தலைமை காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றி, 2 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பாதிக்கப்பட்ட பெண்கள் காமாட்சி மற்றும் கலைவாணி இருவரையும் மீட்டு அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அரசு பெண்கள் கூர்நோக்கி இல்லம் மைலாப்பூரில் ஒப்படைத்து, கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, மேற்படி காவல் ஆய்வாளர் சாரதி வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என அ.சா.3 காவல் ஆய்வாளர் முருகன் சாட்சியம் அளித்துள்ளார்.

**9.7.** மேலும், மேற்படி காவல் ஆய்வாளர் சாரதி மற்ற தலைமை

காவலர்கள் பார்ட்டி சகிதம் சம்பவ இடத்திற்கு சென்று தனிக்கை செய்ததை காட்ட வேறு எந்த ஒரு தனிப்பட்ட அக்கறையற்ற சாட்சிகளையும் முன்னிறுத்தப்படவில்லை. அதேபோல் சம்பவ இடம் தொடர்பாக மாதிரி வரைபடமோ அல்லது பார்வை மகஜரோ தயாரித்து தாக்கல் செய்யப்படாததும் அரசு வழக்கின் நம்பக தன்மையை பாதிப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்களாக கூறப்படும் காமாட்சி மற்றும் கலைவாணி இருவரையும் இவ்வழக்கில் சாட்சிகளாக முன்னிலைபடுத்தாததும் இவ்வழக்கில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.8.** இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில், நிகழ்வு புகார்தாரர் அ.சா.1 காவல் நிலையத்தில் கொடுத்ததாக கூறப்படும் அ.சா.ஆ.1 புகாருக்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், இவ்வழக்கில் அலுவல் சாட்சிகளை தவிர வேறு ஒரு தனிப்பட்ட அக்கறையற்ற சாட்சிகள் விசாரித்து முன்னிறுத்தப்படாத நிலையிலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்களை சாட்சியாக முன்னிறுத்தப்படாத நிலையிலும், சம்பவ இடம் பொறுத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படாத நிலையிலும், மேற்சொன்ன விவாதங்களின் அடிப்படையிலும், எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலன்களை வழங்கியும், அரசு தரப்பால் எதிரிகள் மீது முன்னிறுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>10. முடிவாக</u>**

மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில், அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து 1 வது எதிரி மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 3, 4 and 5 ITP Act–ன் கீழும், 2 வது எதிரி மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 4 and 5 ITP Act–ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என்றும், எனவே மேற்படி எதிரிகளை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**11.** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய சொத்தான PI No. 285/2014 அ.சா.பொ.1 ஆணுறை மூன்றை வழக்கின் மேல் முறையிட்டுக்காலம் முடிந்த பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**12.** எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில் மேல் முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையிடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணைப் பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) S.Vineeth, 22.04.2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், திருக்கழுக்குன்றம்.

பின் இணைப்பு:-

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.முனியன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.செந்தமிழ்செல்வன், தலைமை காவலர் |
| அ.சா.3 | திரு. முருகன், காவல் ஆய்வாளர் |

அரசு தரப்பு சான்றாவணங்கள்:-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.09.2013 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.2 | 18.09.2013 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.3 | 18.09.2013 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.4 | 18.09.2013 | புகார் மனு |
| அ.சா.ஆ.5 | 18.09.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 18.09.2013 | படிவம் 91 |

அரசு தரப்பு சான்றுப் பொருள்:-
அ.சா.பொ.1 - ஆணுறை மூன்று.

எதிரிகள் தரப்பு சாட்சி:- இல்லை.

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை.

எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள்:- இல்லை.

(Sd) S.Vineeth, 22.04.2026
மா.உ.நீ.ம.நீ.ந./தி.க.கு.